**காலி மாநகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் நகர முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து காலி மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவு ரூபா 6,164,842 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் சேமிப்புக் கணக்கு ஒன்றில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,049,977 தொகை ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 528,308 தொகை ஆயுர்வேத மீதி இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருட இறுதில் உள்ள இருப்பை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் தவணைப் பணம் செலுத்தும் போது ரூபா 331,635 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து சாக்கடை பவுஸர் ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2002 ஆம் ஆண்டில் பெற்றிருந்த ரூபா 2,074,972 இற்கான கடன்தொகை மற்றும் பொதுமக்கள் கழிப்பறை ஒன்று நிர்மாணிப்பதற்காக 2005 ஆண்டில் பெற்றிருந்த ரூபா 641,526 இற்கான கடன் தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கடன்தொகையை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vi) | நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | ஆண்டின் போது 45 லொத்தர் குடில்கள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெறுவனவு ரூபா 393,791 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந் தமையால் பெறவேண்டிய லொத்தர் குடில் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (viii) | அலுவலக இடவசதி மற்றும் மாநகர சபை சிற்றுண்டிச்சாலை வருமானம் ரூபா 262,610 தொகை குறைவாக சிட்டையிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ix) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 103,673,560 தொகைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதிகள் மற்றும் அவற்றின் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 9,173,110 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை ஆனதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2003 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 111,553 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 ஆண்டுகளை விட மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 49,396,381 தொகைக்கான 06 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வேன். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 3,091,777,767 தொகைக்கான 14 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நாளது வரை ஆக்கப்பட்டு, முறைப்படி பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதிவேடு களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 178,438,560 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 198,808,270 தொகை காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 வருடங்கள் முதல் காணப்படும் ரூபா 192,088 தொகைக்கான 13 மதிப்பளிக்கப்படாத காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் ரூபா 55,474 தொகைக்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பான தகவல்கள் சபையில் காணப்படவில்லை. | தகவல் கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |
| (ஆ) | பொதுக் கணக்கிற்கு உரிய காசேட்டின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,836,395 தொகை காணப்பட்ட போதிலும், திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு காசேட்டின் படி மீதி ரூபா 1,973,292 தொகையாக காணப்பட்டமையால், காசு மீதியில் ரூபா 4,809,687 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 111,510,000 | 106,365,583 | 105,113,546 | 142,355,829 | 83,010,000 | 90,149,355 | 100,394,779 | 137,776,385 |
| வாடகை | 105,582,275 | 48,236,132 | 42,975,003 | 26,184,809 | 80,292,000 | 33,403,743 | 43,777,996 | 28,588,585 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 42,104,000 | 37,150,353 | 36,326,845 | 9,468,570 | 33,004,000 | 14,663,088 | 40,214,605 | 11,537,062 |
| ஏனைய வரு மானங்கள் | 158,007,000 | 170,068,921 | 84,220,934 | 8,237,753 | 540,675,000 | 119,737,551 | 343,683,541 | 296,555,871 |
| | 417,203,275 | 361,820,989 | 268,636,328 | 186,246,961 | 736,981,000 | 257,953,737 | 528,070,921 | 474,457,903 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சேகரிக்கப் பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 836,278,892 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 268,636,328 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தலில் முன்னேற்றம் 32 சதவீதம் ஆக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 06 ஆதனங் களிலிருந்து மீளாய்வாண்டின் போது தரை வாடகை மற்றும் விளைச்சல் வரி என ரூபா 306,700 தொகை சிட்டையிடப்பட்டிருந்த போதிலும், பணம் ஏதும் ஆண்டின் போது அறவீடு செய்திருக்காமையால் வருட இறுதியில் உள்ளவாறு அந்த ஆதனங்கள் தொடர்பாக ரூபா 1,173,046 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. நிலுவைத் தொகைகளை அறவீடு செய்தல் தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டம் பிரிவு 251 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான வீதவரி சிட்டை யிடப்பட்டவை ரூபா 86,423,624 தொகை எனினும், கிடைத்த வருமானம் ரூபா 48,219,320 தொகை ஆகக் காணப்பட்டமையால் ஆண்டிற் காக சிட்டையிடப்பட்டவைகளில் அறவிடப்படாத வருமானம் ரூபா 38,204,304 தொகை அதாவது 44 சதவீத அளவான உயர்ந்த பெறுமதிக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 123,707,646 தொகைக்கான நிலுவை வீதவரி மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 31,834,101 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 91,873,545 தொகை தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவை மீதியில் அறவீடுகள் 26 சதவீதமான குறைந்த விகிதாசாரத்தைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 26,184,809 இற்கான நிலுவை வாடகை மீதி ஒன்று காணப்பட்டதுடன், அதனை அறவீடு செய்வதற்கு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ)(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கடைகளை வாடகைக்கு கொடுத்தல்**

| | | |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 179 கடைகளில் இருந்து ரூபா 5,186,918 இற்கான வாடகை தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்ட போதிலும், நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வேன். |

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 9,468,570 தொகையாக காணப்பட்ட நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது தொடர்பாக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ)(10) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வேன். |

**2.3.6 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 466,624,792 தொகை எனினும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 84,220,934 தொகை அதாவது 18 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்து இருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் புவியியல்சார் தகவல் முறைமை ஒன்று நிறுவுவதற்காக மேற்கொள்ளப் பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2013 ஜூலை 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் உடன்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 2,026,950 தொகை செலவிடப் பட்டிருந்தது. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து சபையின் அலுவல்களுக்கு பயன்படுத்த வேண்டும். | தரவுகள் பெற்றுக் கொள்ளல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out come) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிட வரைபுகளுக்காக அறவிடப்படும் அணவல் அங்கீகாரக் கட்டணம் நகர சபைக்குச் சொந்தமான சேமிப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்து பிரதேசத்தின் அபிவிருத்தி வேலை களுக்காக பயன்படுத்த முடியும் எனினும், சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 5,830,583 இற்கான மீதி அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | குறிப்பிட்ட பணம் அபிவிருத்தி அலுவல் களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டங் களுக்காக ஈடுபடுத்துவேன். |

**(ஈ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிர்மாண வேலையின் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என ரூபா 8,855,676 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் பெறுமதி கூட்டிய வரி உட்பட ரூபா 15,129,632 தொகை கொடுப்பனவு செய்தமையால் ரூபா 273,956 தொகை மிகையாகச் செலுத்தப் பட்டிருந்தது. | மிகையாக செலுத்திய முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ii) | 2018 பெப்ரவரி 14 ஆந் திகதி மேற்கொண்ட அவதானிப்பின் போது பரப்பப்பட்டிருந்த கொங்கிரீட் மாதிரி கள் உரிய நியமங்களுடன் காணப்படவில்லை. | தோல்வி அடைந்த வேலை விடயங்களை சரிசெய்து செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (iii) | ருஹுணு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மூலம் வழங்கியிருந்த திறன்தொழில் அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் கொங்கிரீட் தூண்களின் கம்பிகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட தால் அந்த தூண்களுக்காக இரும்பு தூண்கள் பயன்படுத்தி வலுப்படுத்தி இருக்கவில்லை. | சரிசெய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (iv) | விறாந்தை பகுதியில் கொங்கிரீட் தூண்கள் மற்றும் படை வெடிப்படை ந்திருந்தமையால் அதற்கு முன்னர் கட்டமைப்பு சார் சாத்தியம் மற்றும் வலு தொடர்பான திறன்தொழில் விதப்புரை பெற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. | திறன்தொழில் பரிந்துரை பெற்றுக் கொள்ள வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (v) | நிர்மாண வேலை தாமதம் அடைந்ததால் 2018 ஆம் ஆண்டின் 2 மாதங்களின் வருமானத்தை இழந்துள்ளது. | விரைவாக செயற் திட்டத்தை பூர்த்தி செய்து சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 20 ஆம் திகதிய 2015/53 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2017 மே மாத மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வழிகாட்டலின் பிரகாரம் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சபை செயற்பட்டிருக்கவில்லை. | உரிய வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், தொடர் நடவடிக்கை அலுவல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | பதில் அளித்திருக்க வில்லை. |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) விளையாட்டுத் திடலை வாடகைக்கு விடல்** | | |
| காலி மாநகர சபை விளையாட்டுத் திடலை 2008 ஏப்ரல் 20 ஆந் திகதி முதல் 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி வரையான காலப் பகுதிக்கான இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) தீ அணைக்கும் அலகு**

| | | |
|---|---|---|
| தீ அணைக்கும் சேவைக்கான மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 398,267 தொகை 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப் படாமல் காணப்பட்டது. அதே போல் தீ அணைக்கும் அலகு தொடர்பாக சேவை யாப்பொன்று தயாரித்து, அங்கீகரிப்பதற்காக 20 வருடங்களாக நடவடிக்கை எடுக்காததுடன் அதற்கான பொருத்தமான சேவை முறைமாற்ற முறைமை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும், அந்த அலகுக்கு உரிய சேவை யாப்பொன்று தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆண்டில் புதிய யாப்பொன்று அறிமுகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) ஆதனங்கள் குத்தகைக்கு கொடுத்தல்**

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 05 குத்தகை ஆதனங்கள் மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதன் மூலம் சபைக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய குத்தகை வருமானத்தை இழந்துள்ளது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகளின் போது குத்தகைக்கு கொடுத்தது தொடர்பாக பெறவேண்டியிருந்த ரூபா 2,556,143 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டியதுடன் மற்றும் குத்தகைக்கு கொடுக்கக் கூடிய ஆதனைங்களை குத்தகைக்கு கொடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள்**

| | | |
|---|---|---|
| பதிவேடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் 21 காணப்பட்ட துடன் அவற்றின் 03 திருத்தவேலை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது. 03 உத்தி யோகபூர்வ வாசஸ்தலங்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் நகர வியாபார குடில்களுக்காகவும் மற்றும் பகலில் குழந்தை பராமரிப்பு நிலையத்திற்காகவும் பயன்படுத்தப் பட்டிருந்தமையால் 08 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் குறிக்கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை திருத்தி குறிக் கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் பதிவேடொன்று பேணப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மிகையாக சேர்க்கப்பட்டிருந்த 113 ஊழியர்களை முறைப்படுத்துவதற்கும் 123 வெற்றிடங்களை முறைப் பிரகாரம் ஊழியர்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவிகளுக்காக முறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |
| (ஆ) | வருட இறுதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சொன்றுள்ள, ஓய்வுபெற்ற, இறந்த மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்ட 33 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,775,753 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 399,443,462 இற்கான சொத்துக்கள் மற்றும் ரூபா 66,474,278 இற்கான களஞ்சிய இருப்பு மீதியொன்று காணப்பட்ட போதிலும், தொடர்ந்தும் சொத்துக்கள் பதிவேடு என்பன மற்றும் இருப்புப் பதிவேடு என்பன நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் இருப்புப் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

### 3.4.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தீ அணைக்கும் அலகில் காணப்பட்ட வாகனம் ஒன்று பௌதீக பரிசோதனையின் போது தொழிநுட்பக் கோளாரின் காரணமாக செயற்படு நிலையில் காணப்படவில்லை. தீ அணைப்பு அலகில் காணப்படும் வாகனம் தீடீரென உயிரூட்டக் கூடிய முறையில் செயற்படு நிலையில் வைத்துக்கொள்ள வேண்டி இருந்ததினால் உரிய காலப்பகுதியில் பரிசோதனை மேற்கொண்டு செயற்படு நிலைமையை உறுதிப்படுத்துவது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலப்பகுதிகளில் பரிசோதனை மேற்கொண்டு தொழில் நுட்பக் கோளாறுகளை இனங்கண்டு திருத்த வேலை மேற்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை எல்லைகக்கு வெளியே தீ நிவாரண சான்றுதல் வழங்கும் போது அறவிடப்படும் கட்டணத்தில் 50 சதவீதத்தில் தொகை குறிப்பிட்ட ஊழியர்களுக்கு வழங்குவதற்கும், தீ அணைக்கும் படையினருக்கு பயிற்சி வழங்கும் கட்டணத்தில் 2/3 தொகை அந்தப் பயிற்சி வழங்கும் உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | படிகள் கொடுப்பனவு செய்வதற்காக முறையான அதிகாரம் இருக்க வேண்டும். | சபைத் தீர்மானத்தின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்கிறேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருமான விடயங்களில் நெருங்கி இருக்காத இலக்கு வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 160,558,967 தொகை காணப்பட்டதுடன், அப் பெறுமதி 29 சதவீதம் முதல் 82 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப் பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாண) சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளல், கணக்காய்வு அறிக்கைகள் வழங்குதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு முறைமையை அறிமுகப் படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஏற்படுத்தி போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கைகள் அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |